ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1957/17 - 2016 මාර්තු මස 09 වැනි බදාදා - 2016.03.09

*1957/17 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 09 ஆந் திகதி புதன்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி III - காணிகள்

## காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் அறிவித்தல்கள்

*நியதிச்சட்டமுறையான இல. 2515*
*விசேட இல. மஹ/167.*

**1972 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, காணிச் சீர்திருத்தச் சட்டம்**

*19 ஆம் பிரிவின் கீழான நியதிச்சட்ட முறை விதிப்பு*

*திஸ்பனே, நாவலப்பிட்டியில் வசித்து வருகின்ற திரு. ஜயவீர கருணாரத்னவினால் சட்டத்தின் 18 ஆம் பிரிவின் கீழ் நியதிச்சட்ட முறையானதொரு பிரகடனம் செய்யப்பட்டுள்ளதுடன் 19 ஆம் பிரிவின் கீழ் காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவிற்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி இந்த ஆணைக்குழுவினால் நியதிச்சட்டமுறையான குத்தகைக்காரருக்கு சொந்தமாகியிருந்த கமத்தொழில் காணிகளில் அவர் வைத்திருக்க அனுமதி வழங்கவேண்டிய பகுதியை நிர்ணயித்து 1976, ஆவணி மாதம் 25 ஆந் திகதிய 227/5 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் (அதிவிசேட) வர்த்தமானப் பத்திரிகையில் நியதிச் சட்டமுறையான இலக்கம் 2515 இன் கீழ் பிரசுரிக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளது. அப்படி வழங்கப்பட்டுள்ள நியதிச்சட்ட முறையாவணத்தில் குறைவு பூரணப்படுத்துவதற்காக நியதிச்சட்ட முறையான குத்தகைக்காரருக்கு வைத்திருக்க அனுமதி வழங்கப்பட்ட கமத்தொழில் காணிப்பகுதிகள் பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.*

*தீ. ஏ. சுமனதிஸ்ஸ தாம்புகல,*
*தலைவர்,*
*காணிச் சீர்திருத்த ஆணைக்குழு.*

*காணிச் சீர்திருத்த ஆணைக்குழு,*
*சீ. 82, ஹெக்டர் கொப்பேகடுவ மாவத்தை,*
*கொழும்பு 07,*
*2016, மாச்சு 07.*

**அட்டவணை**

*1. மத்திய மாகாணம், கண்டி மாவட்டத்தின், பஸ்பாகே கோறளை பிரதேச பெரும்பாக உத்தியோகத்தர் பிரிவின் பஸ்பாகே கோறளை சிறு பிரிவின் கடியன்லென எனும் கிராமத்தில் அமைந்துள்ள நிலஅளவையாளர் நாயகத்தினால் வரையப்பட்ட ஆரம்ப வரைபட இல. மஹ 959 யில் காட்டப்பட்டுள்ளதுமான கடியன்லென வத்த எனும் காணியில் காணித்துண்டு இல. 05 மற்றும் 06 இல் காட்டப்பட்டுள்ள 3 ஏக்கர் 2 றூட் 14 பேர்ச்சஸ் அளவு கொண்ட காணிப் பகுதியும் அதனுள்ளடங்கிய சகலதும்.*

*3- 614/1*

நியதிச்சட்டமுறையான இல. 4637
விசேட இல. ர/227.

**1972 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, காணிச் சீர்திருத்தச் சட்டம்**

*19 ஆம் பிரிவின் கீழான நியதிச்சட்ட முறை விதிப்பு*

ஓமல்பே, தியகபொட, ''லீலா இல்லம்'' இல் வசித்து வருகின்ற திரு. தியோனிஸ் அப்புஹாமி இராஜபக்ஷவினால் சட்டத்தின் 18 ஆம் பிரிவின் கீழ் நியதிச்சட்ட முறையானதொரு பிரகடனம் செய்யப்பட்டுள்ளதுடன், தற்போது காலமாகி உள்ளதால் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் கீழ் காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவிற்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி இந்த ஆணைக்குழுவினால் நியதிச்சட்டமுறையான குத்தகைக்காரருக்கு சொந்தமாகிவிருந்த கமத்தொழில் காணிகளில் அவர் வைத்திருக்க அனுமதி வழங்க வேண்டிய பகுதியை நிர்ணயித்து அவரின் மரணச்சாதனச் சொத்துக்கு சட்டமுறையானதொரு விதிப்பு விதிக்கப்பட்டுள்ளது. அவ்வாறு நியதிச்சட்ட முறையான குத்தகைக்காரருக்கு வைத்திருக்க அனுமதி வழங்கப்பட்ட கமத்தொழில் காணிப் பகுதிகள் பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.

தீ. ஏ. சுமனதிஸ்ஸ தாம்புகல,
தலைவர்,
காணிச் சீர்திருத்த ஆணைக்குழு.

காணிச் சீர்திருத்த ஆணைக்குழு,
சீ. 82, ஹெக்டர் கொப்பேகடுவ மாவத்தை,
கொழும்பு 07.
2016, மாச்சு 07.

**அட்டவணை**

1. சப்பிரகமுவ மாகாணம், இரத்தினபுரி மாவட்டத்தின், கொலொன்ன பிரதேச செயலாளர் பிரிவின் தியபொட்டகம பத்துவ சிறு பிரிவின் இல. 217 A கிராம அலுவலர் பிரிவின் கொடகவெல எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் நிலஅளவையாளர் நாயகத்தினால் வரையப்பட்ட இறுதி கிராம வரைபட இல. 759 இன் மேலதிக இல. 35 இல் காட்டப்பட்டுள்ளதுமான கெதிகாவதென்ன வத்த எனும் காணியில் 16 ஏக்கர் 0றூட் 17.12 பேர்ச்சஸ் அளவு கொண்ட 391, 394, 395, 396, 401 மற்றும் 402 ஆம் இலக்க காணித்துண்டும் அதனுள்ளடங்கிய சகலதும்.

3- 614/2